**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் I பரீட்சை - 2024 யூலை**

## (104) வணிகச் சூழல்

பெரும்பாலான பரீட்சை எழுதும் மாணவர்கள் வணிகச் சூழல் வினாத்தாளுக்கு தரத்திலும் அளவிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பதிலளித்துள்ளனர். எவ்வாறாயினும் முழு வினாத்தாளின் விடையளித்திருக்கும் முறையினை ஆய்வு செய்கையில் மாணவர்கள் சில வினாக்களுக்கு தங்கள் முழுமையான பங்களிப்பினை அளிக்காமல் இருப்பதனை காணக்கூடியதாக உள்ளது.

எனவே , மதிப்பீட்டின் போது தேர்வு ஆய்வாளர்களால் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்ட சில முக்கிய அவதானிப்புகள் பின்வருமாறு:

**பகுதி – A**

### வினா இல. 01

இந்த பகுதி முழுப்பாடத்திட்டத்தினையும் உள்ளடக்கும் விதத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன், பொதுவாக எல்லா மாணவர்களும் இவ் கேள்வி தொகுதிக்கு வெற்றிக்கரமான விடையளித்து. மதிப்பெண்களை பெற்று இருந்தாலும், பெரும்பாலான மாணவர்கள் வினா 1.1,1.5,1.8 மற்றும் 1.18 வினா தொகுதிக்கு விடைகளை வழங்குவதில் பலவீனங்களை கொண்டிருக்கினர். கீழ்வருவன அவ்வாறு அவதானிக்கப்பட்ட கேள்வி பகுதியின் பொதுவாக காணப்பட்ட தவறுகள் மற்றும் பலவீனங்கள் ஆகும்.

**1.1** இந்த கேள்வியானது வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியொன்றின் பங்குதாரர்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை பற்றியதாகும். இருப்பினும் பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு தவறான விடையினை அளித்துள்ளனர். சில மாணவர்களே சரியான விடையினை எழுதியிருந்தனர்.

**1.5** இந்த கேள்வியானது போட்டரின் ஐந்து படைகள் பகுப்பாய்வில் அமையாத கருத்து பற்றியதாகும். ஆயினும் பெரும்பாலான மாணவர்கள் இந்த கேள்விக்கு சரியான விடையினை எழுதாததுடன் கேள்வியினை சரியாக அடையாளங் காணுவதற்கு தவறியுள்ளனர்.

**1.8** இந்த கேள்வியானது மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களை அடிப்படையாக கொண்டதாகும். சில மாணவர்களே சரியான விடையினை எழுதியிருந்ததுடன். பெரும்பாலான மாணவர்கள் கேள்வியினை சரியாக புரிந்து கொள்ளாமல் சரியான விடையினை எடுத்துரைக்க தவறியுள்ளனர்.

**1.18** இந்த கேள்வியானது மூலதனசந்தை மற்றும் பணச்சந்தைக்கும் இடையிலான வேறுபாடு பற்றியதாகும். பெரும்பாலான மாணவர்கள் கேள்வியினை சரியாக புரிந்து கொள்ளாமல் பணப்பரிமாற்று சந்தைக்கும் மூலதன சந்தையினை சொத்து பரிமாற்று சந்தையாக கருத்திற்கொண்டு விடையினை எடுத்துரைத்து இருந்தனர். ஆகையால் மாணவர்கள் சந்தைகள் பற்றிய போதிய அறிவுதிறனை மேம்படுத்துதல் வேண்டும்.

எவ்வாறாயினும் மேற்குறித்தவை தவிர்த்து கொடுக்கப்பட்ட பெரும்பாலான கேள்விகளுக்கு மாணவர்கள் சரியான விதத்தில் புரிந்து கொண்டு விடைகளை அளித்து இருந்தனர்.

**பொதுவாக எடுத்து நோக்கினால் பெரும்பாலான அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

**பகுதி – B**

இவ் தொகுதியானது நான்கு கட்டாயக்கேள்வி தொகுதியினை உள்ளடக்கியதுடன் ஒவ்வொன்றும் 10 மதிப்பெண்களை உள்ளடக்கியதாகும்.

## வினா இல. 02

இவ் கேள்வி தொகுதியானது வரையறுக்கப்பட்ட தனியார் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பற்றியதாகும்.

**(a)** பெரும்பாலான மாணவர்கள் சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளை பெற்று இருந்தாலும். சில மாணவர்கள் பங்குடமை மற்றும் கூட்டமைப்பின் வேறுபாட்டினை கருத்திற்கொண்டு சரியான விடையளிக்க தவறியிருந்தனர்.

**(b)** இக்கேள்வியானது தனியுடமை வியாபாரத்திற்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கும் இடையிலான பண்புகளின் வேறுபாட்டினை எடுத்துரைக்குமாறு கேட்டுகொள்ளப்பட்டிருந்தது. பெரும்பாலான மாணவர்கள் சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளை பெற்று இருந்தாலும், சில மாணவர்கள் பண்புகள் பற்றிய தெளிவான விளக்கமின்மை காரணமாக தவறான விடைகளை அளித்து இருந்தனர்.

**(c)** இக்கேள்வியானது வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் அனுகூலங்கள் மற்றும் பிரதிகூலங்கள் பற்றியதாகும். பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பொதுவாக எடுத்து நோக்கினால் பெரும்பாலான அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

## வினா இல. 03

இவ் கேள்வி தொகுதியானது நாணயத்தாள் மற்றும் வியாபார நடைமுறைகள் பற்றியதாகும்.

**(a)** பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** பெரும்பாலான மாணவர்கள் காசோலை ஒன்றை எழுதும்போது கவனத்தில்கொள்ள வேண்டிய விடயங்களை சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றிருந்தனர். மேலும் சில மாணவர்கள் பொதுயறிவனை பயன்படுத்தி சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(c)** இக்கேள்வியானது இலத்திரனியல் பணம் ஏன் பிரபலமான முறையாக கருத்தில் கொள்வதை அடிப்படையாக கொண்டது. மற்றும் பெரும்பாலான மாணவர்கள் சரியான விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றுக்கொண்டதுடன். சில மாணவர்கள் பொதுயறிவனை பயன்படுத்தி சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பொதுவாக எடுத்து நோக்கினால் பெரும்பாலான அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

## வினா இல. 04

**(a)** சராசரிக்கும் குறைவான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டு இருந்தாலும். பெரும்பாலோனோர் டிஜிடல் பிரின்டஸ் பற்றிய அறிவின்மை மற்றும் இது தொடர்பான அரசாங்கத்தின் நோக்கங்கள் பற்றிய தெளிவின்மை காரணமாக சரியான விதத்தில் விடையளிக்க தவறியிருந்தனர்.

**(b)** டிஜிடல் பிரின்டஸ் இன் சமூகம் தொடர்பான பொறுப்புக்களை எடுத்துரைக்குமாறு கேக்கப்பட்ட அக்கேள்வியானது சராசரிக்கும் குறைவான மாணவர்களே கேள்வியை அணுகியதுடன் சரியான விதத்தில் விடையளிக்க தவறியதுடன் குறைந்த மதிப்பெண்களை பெற்றுக்கொண்டனர்.

**(c)** இக்கேள்வியில் இலங்கையின் பொருளாதாரத்தில் நடுத்தர முனைவாக்கங்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை பற்றி கேட்கப்பற்றிருந்தது. பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர். பெரும்பாலான மாணவர்கள் பொதுயறிவனை பயன்படுத்தி சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

**பொதுவாக எடுத்து நோக்கினால் சராசரி அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

## வினா இல. 05

இவ் கேள்வி தொகுதியானது வணிக உலகலாவிய சூழல் மாற்றங்கள் பற்றி மாணவர்களின் அறிவினை அளவிடும் திறன்கோளாக கேட்கப்பட்டதாகும்.

**(a)** பெரும்பாலான மாணவர்கள் மொத்த வியாபார மற்றும் சில்லறை வியாபார வேறுபாடு உருப்படிகளை சரியான முறையில் எடுத்துரைத்து, சரியான விதத்தில் விடையளித்து முழு புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

**(b)** இவ் கேள்வியானது உலகலாவிய வணிகச் சூழலின் தாக்கங்கள் பற்றியதாகும். சராசரிக்கும் குறைவான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து சராசரி புள்ளிகளை பெற்றுக்கொண்டு இருந்தாலும். பெரும்பாலோனோர் கேள்வி பற்றிய தெளிவின்மை காரணமாக சரியான விதத்தில் விடையளிக்க தவறியிருந்ததுடன் சராசரிக்கும் குறைவான மதிபெண்களை பெற்றுக்கொண்டனர்.

**(c)** பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

**பொதுவாக எடுத்து நோக்கினால் பெரும்பாலான அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

### பகுதி -C

## வினா இல. 06

இவ் கேள்வி தொகுதியானது வணிகச்சூழல் நடைமுறைகள் பற்றி ஒரு உதாரண கதைகளமைப்பினை கொண்டு கம்பனியான எக்கோ-கிளீனின் பற்றிய மாணவர்களின் அறிவினை அளவிடும் திறன்கோளாக கேட்கப்பட்டதாகும். பெரும்பாலான மாணவர்கள் இவ்கேள்வினை அணுகியதுடன் சாராசரிக்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்றுக்கொண்டனர்.

**(a)** பெரும்பாலான மாணவர்கள் எக்கோ-கிளீனின் வணிகச்சூழல் பற்றிய கட்டங்களை சரியாக புரிந்து கொண்டு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர். ஆனால் சிலர் விடையளித்திருந்தாலும் அவர்களிகள் விடைகள் திருப்திகரமான மட்டத்தில் அமையாதுடன் குறைவான மதிபெண்களை ஈட்டிகொண்டதற்கான காரணங்கள் வருமாறு.

- SWOT பகுப்பாய்வனை பற்றியும் கேள்வி பற்றிய தெளிவின்மை.
- சில மாணவர்களே வணிகச்சூழல் பற்றிய உறுதிபாடுகள், பலவீனங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் பற்றி எடுத்துரைத்து இருந்தனர்
- மேலும் சில மாணவர்கள் SWOT பகுப்பாய்விற்கு பதிலாக PESTEL பகுப்பாய்வினை எடுத்துரைத்து இருந்தனர்.

**(b)** பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர்.

**(c)** இவ் கேள்வி தொகுதியானது இலங்கையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் கடன்வழங்கும் சேவை தவிர்த்து வணிகங்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பற்றியதாகும். பெரும்பாலான மாணவர்கள் சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர். ஆனால் சிலர் விடையளித்திருந்தாலும் அவர்களிகள் விடைகள் திருப்திகரமான மட்டத்தில் அமையாதுடன் குறைவான மதிபெண்களை ஈட்டிகொண்டதற்கான காரணங்கள் வருமாறு.

- கேள்வியினை சரியாக புரிந்துகொள்ளாமல் வங்கி கடன்கள் மற்றும் வங்கி மேலதிகப்பற்று பற்றிய கருத்தினை விடையாக அளித்திருந்தமை.
- மேலும் சிலர் வர்த்தக வங்கிகளும் நாணயதாள்களை விநியோகம் செய்வதாக தவறான நோக்கத்தில் விடையளித்திருந்தமை.

**(d)** எக்கோ-கிளீனின் நிறுவனத்திற்கு ஏன் காப்புறுதி அவசியமானது பற்றிய கேள்வியாகும். பெரும்பாலான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து முழு புள்ளிகளை பெற்றுக்கொண்டனர். இருப்பினும் சிலர் சரியான விளக்கத்தினை எடுத்துரைக்க தவறிவிட்டனர்.

**(e)** இக் கேள்வியானது எக்கோ-கிளீனின் நிறுவனம் தங்களது வணிக பங்களிப்பினை தவிர்த்து இலங்கையில் நீடித்திருக்கத்த எதிர்காலத்திற்கு எவ்வாறுபங்களிப்பு செய்கிறது பற்றியதாகும். சராசரியான மாணவர்கள் இக் கேள்விக்கு சரியாக விடையளித்து சராசரி புள்ளிகளை பெற்றுக்கொண்டு இருந்தாலும். சில மாணவர்கள் பொது அறிவனை பயன்படுத்தி சரியான விதத்தில் விடையளித்து மதிபெண்களை பெற்றுக்கொண்டனர்.

பொதுவாக கொடுக்கப்பட்ட கருத்துகளத்தினை சரியான முறையில் வாசித்து புரிந்து கொண்டு விடையளிக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றது.

**பொதுவாக எடுத்து நோக்கினால் பெரும்பாலான அளவில் திருப்திகரமான மட்டத்தில் மாணவர்கள் விடைளித்துயிருந்தனர்.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

(1) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடப்புத்தகங்களை படித்தல் வேண்டும்.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதும் உரிய வினாத்தாள்களுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரலுக்கேற்ப விடையளித்து பயிற்சி பெறுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

(3) மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(4) விடைகளை வினாத்தாளிலேயே எழுதி அதனை விடைத்தாள்களுடன் அனுப்ப வேண்டாம்.

(5) கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களை கைவிட எத்தனிக்க வேண்டாம். இது குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

(6) அறிவை நிகழ்நிலைப்படுத்துவதற்கு அண்மையில் வெளியான இதழ்கள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தவும்.

(7) புதிய வினாவுக்கு விடையளிக்க ஆரம்பிக்கும்போது ஒரு புதிய பக்கத்தைப் பயன்படுத்தவும்.

- * * * -